# எழுப்புதலுக்கு 12 படிகள்



டக் பேச்சுலர்

Copyright © 2008, 2021
by Doug Batchelor

All rights reserved.
Printed in India.

Published by:
**Amazing Facts India**
Post Box No 51
Banjara Hills, Hyderabad
Telangana, 500034

www.AmazingFactsIndia.org

# எழுப்புதலுக்கு 12 படிகள்


இரண்டு மாபெரும் வெற்றியாளர்கள் . . . . . . . . . . . 2

12 படிகள

1.தைரியமான மற்றும் பயமில்லாத உபதேசம் – தலைவர்களுக்கு முன்பாகவும் கூட . . . . . . . . . . . . 7

2.எளிமையான ஆகாரமும் வாழ்க்கை முறையும் . . . . 9

3.தகுதியான வஸ்திரம், எளிமையான உடை. . . . . . 10

4.மற்றவர்களை சீஷராக்குதல் . . . . . . . . . . . . . . . 12

5.மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானம் பற்றியும் சுயத்துக்கு மரித்தலைப் பற்றியும் உபதேசித்தல் . . . 14

6.வெளிப்படுத்தப்படும் மனத்தாழ்மை . . . . . . . . . . 15

7.சன்மார்க்க உபத்திரவத்தைத் தாங்குதல் . . . . . . 16

8.ராஜாவுக்கு முன்பாக ஓடுதல் . . . . . . . . . . . . . 18

9.தேவனை மகிமைப்படுத்துவதில் முதன்மையான அக்கறை. . . . . . . . . . . . . . . . . . . . . . . . 20

10.தேவனுடைய பலிபீடத்தை செப்பனிடுதல் . . . . . . . . . 21

11.செய்திகள் சீர்திருத்தத்தைத் தூண்டுகின்றன. . . . 22

12.மக்களுக்கு கிறிஸ்துவைக் காட்டுங்கள். . . . . . . 24

தேவனுடைய சேனை . . . . . . . . . . . . . . . . . . . 25

***ஒரு ஆச்சரியமான உண்மை:*** *நம்முடைய குரல்களால் வெளீயிடப்படும் ஒலி அலைகள் விண்வெளியில் தொடர்ந்து பயணிக்கின்றன மற்றும் பல வருடங்களுக்குப் பிறகு போதுமான உபகாரணங்களோடு ஏதோ ஒரு கிரகத்தில் நிற்க நமக்கு வல்லமை இருக்குமென்றால் அவைகளை நாம் மறுபடியும் கண்டுபிடிக்க முடிந்து நாம் பூமியில் பேசிய வார்த்தைகளை மறுஉருவாக்கம் செய்ய முடியும் என்று விஞ்ஞானிகள் சொல்லுகிறார்கள்.*

# இரண்டு மாபெரும் வெற்றியாளர்கள்

பொதுவான வெதுப்பான சபையும் தடுமாறும் தேவனுடைய பிள்ளைகளும் இருக்கும் இந்தக்காலத்தில், கர்த்தரோடு நமக்கு இருக்கும் உறவுகளை மறுபடியுமாக நிலை நிறுத்துகின்ற முன் மாதிரியாளர்களையும் வழிக்காட்டிகளையும் காணும்படியான மாபெரும் புருஷர்களையும் ஸ்திரீகளையும் கொண்ட கதாநாயகர்கள் மக்களுக்குத் தேவைப்படுகின்றனர். நாம் பின்பற்றக்கூடிய விசேஷித்த செய்திகளை அறிவித்து விசுவாசத்தை வெளிக்காட்டிய சிறந்த

கதாநாயகர்களாக வேதாகம தீர்க்கதரிசிகள் திகழ்கிறார்கள், மற்றும் நம் மனதுக்குள் தோன்றும் பரிசுத்த எழுத்துகளில் காணப்படும் மாபெரும் வெற்றியாளர்கள் எலியாவும் யோவான்ஸ்நானனுமே.

அவர்களுடைய காலங்களில் வல்லமையான சீர்திருத்தங்களை உருவாக்க தேவன் இந்த இரு புருஷர்களையும் பயன்படுத்தினார், மற்றும் உங்களுடைய வாழ்க்கையிலும் இன்றைய சபையிலும் அவர் இதையே செய்ய விரும்புகிறார்.
மல்கியா 4:5, 6 சொல்லுகிறது, "இதோ, கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருகிறதற்கு முன்னே நான் உங்களிடத்திற்கு எலியா தீர்க்கதரிசியை அனுப்புகிறேன். *நான் வந்து பூமியைச் சங்காரத்தால் அடிக்காதபடிக்கு, அவன் பிதாக்களுடைய இருதயத்தைப் பிள்ளைகளிடத்திற்கும்,* பிள்ளைகளுடைய இருதயத்தை அவர்கள் பிதாக்களிடத்திற்கும் திருப்புவான்".

ஒருவேளை, இந்த வசனம் எதைச் சொல்லவில்லை என்பதை புரிந்து கொள்ள சிறிது நேரத்தை நாம் செலவிட வேண்டும். இயேசுவின் காலத்தில் எலியா பரலோகத்திலிருந்து பூமியில் நேரடியாக மறுபடியும் வாழ வருவார் என அநேகர் நம்பினர் அல்லது அநேகமாக ஒரு புதிய

மனிதனாக மறுபடியும் பிறப்பார் என நம்பினர். ஒருமுறை இயேசு சீஷர்களிடம் கேட்டார், “ஜனங்கள் என்னை யார் என்று சொல்லுகிறார்கள் என்று கேட்டார். அதற்கு அவர்கள் சிலர் உம்மை யோவான்ஸ்நானன் என்றும், சிலர் எலியா என்றும், வேறு சிலர் பூர்வகாலத்துத் தீர்க்கதரிசிகளில் ஒருவர் உயிர்த்தெழுந்தார் என்றும் சொல்லுகிறார்கள் என்றார்கள்”. (லூக்கா 9:18,19).

மேசியாவின் வருகைக்குறித்து அறிவிக்க எலியா சீக்கிரம் வருவார் என்கின்ற எதிர்பார்ப்புடன் யூதர்கள் வாழ்ந்தார்கள். ஆனால் மல்கியாவின் இந்த தீர்க்கதரிசனம் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசி மறுபடியும் பூமிக்கு வருவார் என்கின்ற நோக்கத்துடன் ஒருபோதும் சொல்லவில்லை.

மாறாக, எலியாவின் எழுப்புதலின் மற்றும் சீர்திருத்தத்தின் ஆவியே திரும்ப வரும் என முன்னறிவிக்கப்பட்டது. யோவான்ஸ்நானனுடைய பிறப்பு குறித்து பேசும்போது சகரியாவுடன் தேவதூதன் காபிரியேல் சொன்னார், “பிதாக்களுடைய இருதயங்களைப் பிள்ளைகளிடத்திற்கும், கீழ்ப்படியாதவர்களை நீதிமான்களுடைய ஞானத்திற்கும் திருப்பி, உத்தமமான ஜனத்தைக் கர்த்தருக்கு ஆயத்தப்படுத்தும்படியாக, அவன் எலியாவின் ஆவியும் பலமும் உடையவனாய் அவருக்கு

முன்னே நடப்பான்". (லூக்கா 1:17).

மல்கியாவில் இருக்கும் தீர்க்கதரிசனத்தை யோவான்ஸ்நானன்தான் நிறைவேற்றினார் என்பதை முதலாவதாக சுட்டிக்காட்டியது தூதனாகிய காபிரியேல். எழுப்புதல் மற்றும் சீர்த்திருத்தத்தின் ஒரு விசேஷித்த ஊழியத்தை செய்வதற்கு கர்த்தருக்கு முன்பதாக யோவான் வரவேண்டியாயிருந்தது. இயேசு பிற்பாடு இந்த உன்மையை உறுதிப்படுத்தி அவர் சொன்னார், "நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசிகள் யாவரும் யோவான்வரைக்கும் தீர்க்கதரிசனம் உரைத்ததுண்டு. நீங்கள் ஏற்றுக்கொள்ள மனதாயிருந்தால், வருகிறவனாகிய எலியா இவன்தான்" (மத்தேயு 11;13,14).

எப்படியும், மல்கியாவின் தீர்க்கதரிசனத்தின் நிறைவு யோவான்ஸ்நானனோடே முடியவில்லை. நவீன கால நிறைவேற்றமும் அங்கே இருக்கிறது. தீர்க்கதரிசனம் கூறுவதைக் கவனியுங்கள்: "கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருகிறதற்கு முன்னே நான் உங்களிடத்திற்கு எலியா தீர்க்கதரிசியை அனுப்புகிறேன்". "கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள்" என்பது வெளிப்படுத்தின விசேஷம் 6:17-ல் "அவருடைய கோபாக்கினையின் மகா நாள்" என்றும் அழைக்கப்படுகிறது, இது இரண்டாம் வருகையோடு ஒத்துப்போகிறது. அதனால்

இதனுடைய மற்றொரு நிறைவேற்றம் இயேசுவின் வருகைக்கு சற்று முன்னால் இருக்கும் காலக்கட்டத்தைச் சுட்டிக்காட்டுகிறது!

ஒரு நேரடி பார்வையில், உண்மையான எழுப்புதல் குடும்பத்துக்கு ஒரு புதிய அன்பின் பரிமாணத்தைக் கொண்டு வருகிறது மற்றும் அங்கிருந்து, அது சமுதாயத்திற்கு பரவுகிறது. எந்த சமுதாயத்துக்கும் அல்லது அரசாங்கத்துக்கும் அல்லது சபைக்கும் அடித்தளமாக விளங்குவது குடும்பமே. அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதற்கு வழிநடத்தும் அன்பில் தான் தேவனுடைய ஆவியானவரின் வெளிப்பாடு எப்பொழுதும் முடிவடையும். இயேசு சொன்னார், "நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்" (யோவான் 14:15) அதனால் ஒரு ஆவிக்குறிய கருத்தில், எலியாவின் ஆவியும் யோவானின் செய்தியும் பூமியின் கீழ்ப்படியாமையின் பிள்ளைகளை அவர்களுடைய பரலோக பிதாவோடு ஒன்றிணைக்கவும் இன்று வேலை செய்கிறது.

அதனால் இந்த இரண்டு மாபெரும் தீர்க்கதரிசிகள் எப்படி ஒரு புதிய நம்பிக்கை நிறைந்த கர்த்தரின் சார்பாக கீழ்ப்படிதல் மற்றும் கிரியைகளின் செய்தியை கொடுக்க உதவினார்கள் என்பதை சிறிது நேரம்

எடுத்து பார்ப்போம். வேறு வார்த்தைகளில், உண்மையான எழுப்புதல் எலியாவின் ஆவி மற்றும் வல்லமையின் பெரும்பகுதியாக இருக்கும் 12 குணாதிசயங்கள் கிறிஸ்து வருவதற்கு முன்பதாக இருக்கும் கடைசி நாட்களிலும் காணப்படும்.

## 1.தைரியமான மற்றும் பயமில்லாத உபதேசம் – தலைவர்களுக்கு முன்பாகவும் கூட

- ***எலியா*** - "எலியா ஆகாபிடம் சொன்னார், "இஸ்ரவேலைக் கலங்கப்பண்ணுகிறவன் நான் அல்ல; கர்த்தரின் கட்டளைகளை விட்டு பாகால்களைப் பின்பற்றினதினால் நீரும் உம்முடைய தகப்பன் வீட்டாருமே இஸ்ரவேலைக் கலங்கப்பண்ணுகிறவர்கள்" (1 இராஜாக்கள் 18:18).
- ***யோவான்*** - "யோவான் ஏரோதை நோக்கி: நீர் உம்முடைய சகோதரன் மனைவியை வைத்துக்கொள்வது நியாயமல்ல". (மாற்கு 6:18).

ராஜாக்களுக்கும் அரசாங்கங்களுக்கும் முன்பதாக நேரடியான செய்தியை பிரசங்கிப்பதில் யோவான்ஸ்நானன் மற்றும்

எலியா ஆகிய இருவரும் பயமற்றிருந்தார்கள். கடைசி நாட்களில் மறுபடியும் இப்படி நடைபெறும் என்று இயேசு சொன்னார். “என்னிமித்தம் தேசாதிபதிகளுக்கும் ராஜாக்களுக்கும் சாட்சியாக அவர்களுக்குமுன்பாக நிறுத்தப்படுவீர்கள்” (மாற்கு 13:9).

நாம் மனிதரிடம் அங்கீகாரத்தைத் தேடக்கூடாது மாறாக தேவனிடத்தில் தேட வேண்டும். ஒரு மாபெரும் எழுச்சியை நிலை நிறுத்துவதற்கு, எலியா செய்தியானது, ஒரு தைரியமான தெளிவான, விட்டுக்கொடுக்காத மற்றும் சில வேளைகளில் பிரசித்தம் பெறாத சத்தியமான செய்தியாக இருத்தல் அவசியம்.

“ஏனென்றால், அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல், செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக்கொண்டு, சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்துபோகுங்காலம் வரும்” (2 தீமோத்தேயு 4:3,4).

## 2.எளிமையான ஆகாரமும் வாழ்க்கை முறையும்

- ***எலியா*** - “கொஞ்சம் அப்பமும் உன் கையிலே எனக்குக் கொண்டு வா” (1 இராஜாக்கள் 17:11).
- ***யோவான்*** - “வெட்டுக்கிளியையும் காட்டுத்தேனையும் புசிக்கிறவனாயும் இருந்தான்”. (மாற்கு 1:6).

எலியா மற்றும் யோவான் ஆகிய இருவருமே அவர்களுடைய எளிமையான ஆகாரத்துக்கும் வனாந்திர வாழ்க்கைக்கும் அறியப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் தேவனுடைய மகத்தான ஊழியத்தை செய்வதற்கு தயார்படுத்திக் கொள்வதற்காக அவர்களுடைய மனோ வலிமையையும் வலிமையான உடல்களையும் பெற்றுக்கொள்ள இந்த அடிப்படையான கடுமையான பழக்கம் தேவைப்பட்டது. “நீங்கள் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்” (1 கொரிந்தியர் 10:31).

அது போலவே, சரீரத்துக்கும் ஆத்துமாவுக்கும் இடையில் பலமான இணைப்பு உள்ளது என்ற சத்தியத்திற்கு கடைசிகால சபை எழும்ப வேண்டும். நம்முடைய சொந்த

பழக்கவழக்கங்களோடு கூட நாம் என்ன சாப்பிடுகிறோமோ என்ன குடிக்கிறோமோ அது நம்முடைய சத்தியத்தை பகுத்தறிவதற்கான மனத்தெளிவுக்கும் திறனுக்கும் நேரடியான விளைவைப் பெற்றிருக்கிறது. எளிமையான ஆகாரமும் மிதமான வாழ்க்கை முறையும் சோதனையை எதிர்கொள்வதற்கு ஓரளவு வல்லமையுடன் வழிகோலுகிறது. தவறானதை சாப்பிட்டதின் விளைவாகத்தான் மனுக்குலத்தின் மீது பாவம் வந்தது என்பதை நினைத்துப் பாருங்கள்.

“ராஜா குலமகனுமாய், பிரபுக்கள் வெறிக்க உண்ணாமல் பெலன்கொள்ள ஏற்ற வேளையில் உண்கிறவர்களுமாயிருக்கப்பட்ட தேசமே, நீ பாக்கியமுள்ளது” (பிரசங்கி 10:17)

## 3.தகுதியான வஸ்திரம், எளிமையான உடை.

- ***எலியா*** - ‘‘அவர் மயிர் உடையைத் தரித்து (ரோமத்தினாலான வஸ்திரம்) வார்க்கச்சையைத் (அரைக்கச்சை) தன் அரையிலே (இடுப்பு) கட்டிக்கொண்டிருந்தான்” (2 இராஜாக்கள் 1:8)
- ***யோவான்*** - “யோவான் ஒட்டகமயிர் உடையைத் தரித்து தன் அரையில் (இடுப்பு)

வார்க்கச்சையைக் (அரைக்கச்சை)
கட்டிக்கொண்டவனாய்” (மாற்கு 1:6).

ராஜாக்களும் ஆசாரியர்களும் ஆபரணங்களையும் நீண்ட அங்கிகளையும் உடுத்திக் கொள்ள ஆசைப்படும் காலக்கட்டத்தில் எலியா மற்றும் யோவானின் அடக்கமும் எளிமையும் ஒரு தாக்குகின்ற கடிந்து கொள்ளுதலாயிருந்தன.

பகட்டுக்கும் நாகரீகத்துக்கும் எப்பொழுதும் இல்லாத அளவு அதிகமான கவனம் செலுத்தப்படும் ஒரு காலத்தில் நாம் வாழ்கிறோம். நவீன ஆடை அலங்கார வடிவமைப்பாளர்களின் முதன்மையான நோக்கமே ஒரு நபரின் பாலியல் கவர்ச்சியை முன்னிலைப்படுத்துவதேயாகும். துக்ககரமாக உடலை குத்துவதிலிருந்து பச்சைக்குத்துவது வரை எல்லாவற்றிலுமே கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளுபவர்களும் ஈடுபடுகின்றனர். இன்னும் ஒருமுறை, அவர்களுடைய தாழ்மையின் முன்மாதிரியாகவும் மிதமான உடுத்துதல் மற்றும் தோற்றாத்தின் மூலம் எளிமையாகவும் கிறிஸ்துவுக்காக சாட்சியளிக்க சபைக்கு கடைசிகால எலியாக்கள் மிக அவசரமாக தேவையாயிருக்கிறது.

“மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட

புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளுங்கள்" (எபேசியர் 4:24). "ஸ்திரீகளும் மயிரைப் பின்னுதலினாலாவது, பொன்னினாலாவது, முத்துக்களினாலாவது, விலையேறப்பெற்ற வஸ்திரத்தினாலாவது தங்களை அலங்கரியாமல் தகுதியான வஸ்திரத்தினாலும் (உடை), நாணத்தினாலும் (உரிமை) தெளிந்த (மிதமான) புத்தியினாலும் அலங்கரிக்க வேண்டும்" (1 தீமோத்தேயு 2:9,10).

## 4.மற்றவர்களை சீஷராக்குதல்

- ***எலியா*** - "அப்படியே அவன் அவ்விடம் விட்டுப் புறப்பட்டுப்போய், எலிசாவைக் கண்டான்.... எலியா அவன் இருக்கும் இடமட்டும் போய், அவன்மேல் தன் சால்வையைப் போட்டான்" (1 இராஜாக்கள் 19:19).
- ***யோவான்*** - "இவைகளையெல்லாம் யோவானுடைய சீஷர்கள் அவனுக்கு அறிவித்தார்கள்" (லூக்கா 7:18).

எலியா எலிசாவை மட்டும் சீஷனாகக் கொண்டிருக்கவில்லை. ஆனால் இஸ்ரவேல் தேசமெங்கும் பரம்பியிருந்த தீர்க்கதரிசிகளின் பள்ளிகளை (தீர்க்கதரிசிகளின் சீஷர் என மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது)

அவன் பார்வையிட்டான் என்று வேதவாக்கியங்கள் பதிவிட்டிருக்கின்றன. (2இராஜாக்கள் 2). இந்த பயிற்சி மையங்கள் நடைமுறை ஊழிய திறமைகளோடு ஆவிக்குரிய போதனைகளையும் ஒன்றிணைத்தன மற்றும் அங்கே பயிற்றுவிக்கப்பட்ட வாலிபர்கள் தேவனுடையவைகளைக் கற்றுக்கொடுக்க இஸ்ரவேல் முழுவதுக்கும் சென்றார்கள்.

அதே போல, யோவான் அவனை பின்பற்றிய சீஷர்களுக்கு தன்னுடைய விசுவாசத்தைக் கற்றுக்கொடுத்தார். யோவான் மற்றும் எலியா ஆகிய இருவரும் அவர்களுடைய பெரும்பாலான நேரத்தை ஆசாரியர்களுக்கும் லேவியர்களுக்கும் பயீற்றுவிக்க செலவிடவில்லை. மாறாக சாமான்ய மக்களுக்கு செலவிட்டனர். அதேபோல தேவனின் கடைசி மாபெரும் இயக்கம் மத தலைவர்களால் மட்டும் நடத்தப்படுமென்று அல்ல, மாறாக ஆவியால் நிரப்பப்பட்ட சபை விசுவாசிகளாலும் நடத்தப்படும். இதனால் தான் எலியா செய்தி பயிற்சி, சீஷராக்குதல் மற்றும் தேவனுடைய சபையின் ஒவ்வொரு அங்கத்தினரையும் ஊக்குவித்தல் ஆகியவையின் பேரில் கவனம் செலுத்த வேண்டும்.

# 5.மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானம் பற்றியும் சுயத்துக்கு மரித்தலைப் பற்றியும் உபதேசித்தல்

- ***எலியா*** - “பின்பு எலியா அவனை நோக்கி: நீ இங்கே இரு; கர்த்தர் என்னை யோர்தானுக்கு அனுப்புகிறார் என்றான்” (2 இராஜாக்கள் 2:6).
- ***யோவான்*** - “அப்பொழுது, எருசலேம் நகரத்தாரும், யூதேயா தேசத்தார் அனைவரும், யோர்தானுக்கு அடுத்த சுற்றுப்புறத்தார் யாவரும் அவனிடத்திற்கும் போய், தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, யோர்தான் நதியில் அவனால் ஞானஸ்நானம் பெற்றார்கள்” (மத்தேயு 3:5,6).

எலியா செய்தியின் ஒரு குறிப்பிடப்படும் அடையாளம் அது மக்களை யோர்தான் நதிக்கு அழைக்கிறது என்பதே – மனந்திரும்புதல் மற்றும் ஞானஸ்நானத்தின் ஒரு அடையாளம். நாம் ஞானஸ்நானம் என்னும் நீரில் இறங்கி புதிய ஜீவனுக்கு கடந்து செல்லுவது போலவே இஸ்ரவேல் மக்கள் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தேசத்தை அடைவதற்கு யோர்தான் நதியை கடக்க வேண்டியதாயிருந்தது. மறுபடியும் ஒருமுறை

நவீன எலியாக்கள் கிறிஸ்துவுக்கென்று மனம் மாறுபவர்களை பெந்தெகொஸ்தே போல எண்ணற்றோருக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் போது சபைக்கு இயேசு பணித்த கட்டளை நிறைவேறும் நாள் எதிர்காலத்தில் வரும்.

"அப்பொழுது அவன் இறங்கி, தேவனுடைய மனுஷன் வார்த்தையின்படியே யோர்தானில் ஏழுதரம்முழுகினபோது, அவன் மாம்சம் ஒரு சிறுபிள்ளையின் மாம்சத்தைப் போல மாறி, அவன் சுத்தமானான்" (2 இராஜாக்கள் 5:14).

"ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, (மத்தேயு 28:19).

## 6.வெளிப்படுத்தப்படும் மனத்தாழ்மை

- ***எலியா*** - "பின்பு எலியா கர்மேல் பர்வதத்தினுடைய சிகரத்தின்மேல் ஏறி, தரையிலே பணிந்து, தன் முகம் தன் முழங்காலில் பட குனிந்து" (1 இராஜாக்கள் 18:42).
- ***யோவான்*** - "எனக்குப்பின் வருகிறவரோ என்னிலும் வல்லவராயிருக்கிறார், அவருடைய பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கு

நான் பாத்திரன் அல்ல” (மத்தேயு 3:11).

இயேசு மறுபடியும் வரும் முன்பதாக, தேவனுடைய மக்கள் அகந்தையும் பெருமையும் நிறைந்த இந்த காலத்தில் இயேசுவின் சாந்தத்தையும் தாழ்மை குணத்தையும் கற்றிருப்பார்கள். “மனுஷனே, நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார்; நியாயஞ்செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்” (மீகா 6:8).

## 7.சன்மார்க்க உபத்திரவத்தைத் தாங்குதல்

- ***எலியா*** - “அப்பொழுது யேசபேல் எலியாவினிடத்தில் ஆள் அனுப்பி: அவர்களில் ஒவ்வொருவனுடைய பிராணனுக்குச் (கொல்லப்பட்டார்கள்) செய்யப்பட்டதுபோல, நான் நாளை இந்நேரத்தில் உன் பிராணனுக்குச் செய்யாதேபோனால், தேவர்கள் அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் எனக்குச் செய்யக்கடவர்கள் என்று சொல்லச்

சொன்னாள்” (1இராஜாக்கள் 19:2).

- ***யோவான்*** - “அப்பொழுது, அவள் வெளியே போய், நான் என்ன கேட்கவேண்டும் என்று தன் தாயினிடத்தில் (ஏரோதியாள்) கேட்டாள், அதற்கு அவள்: யோவான்ஸ்நானனுடைய தலையைக் கேள் என்றாள்” (மாற்கு 6:24).

பழைய ஏற்பாட்டில், யேசபேல் என்கின்ற அஞ்ஞான ராணி இஸ்ரவேல் ராஜாவாகிய ஆகாபை மணமுடித்திருந்தாள். யேசபேலும் அவளுடைய மகள் அத்தாலியாளும் தேவனுடைய ஜனத்தை உபத்திரவப் படுத்தினார்கள் மற்றும் ஆகாபை மயக்கி எலியாவையும் மற்ற தீர்க்கதரிசிகளையும் கொல்ல முயற்சித்தார்கள்.

புதிய ஏற்பாட்டில், ஏரோது ராஜாவின் அஞ்ஞான மனைவியும் அவளுடைய மகள் சலோமியும் யோவான்ஸ்நானனை கொல்லுவதற்கு ஏரோதை மயக்குவதில் வெற்றி பெற்றனர்.

எலியாவாலும் யோவானாலும் எதிர்கொள்ளப்பட்ட உபத்திரவம் சீக்கிரத்திலே மீண்டும் நிகழும். “வேசிகளின் தாயும்” அவளுடைய மகள்களும் கடைசிகால எலியாக்காளான தேவனுடைய மீதமான மக்களை உபத்திரவப்படுத்துவார்கள். “அப்பொழுது வலுசர்ப்பமானது ஸ்திரீயின்மேல்

கோபங்கொண்டு, தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும், இயேசுகிறிஸ்துவைக்குறித்துச் சாட்சியை உடையவர்களுமாகிய அவளுடைய சந்ததியான மற்றவர்களுடனே யுத்தம்பண்ணப்போயிற்று" (வெளிப்படுத்தின விசேஷம் 12:17).

"மேலும் இரகசியம், மகா பாபிலோன், வேசிகளுக்கும் பூமியிலுள்ள அருவருப்புகளுக்கும் தாய் என்னும் நாமம் அவள் நெற்றியில் எழுதியிருந்தது. அந்த ஸ்திரீ பரிசுத்தவான்களின் இரத்தத்தினாலும், இயேசுவினுடைய சாட்சிகளின் இரத்தத்தினாலும் வெறி கொண்டிருக்கிறதைக் கண்டேன்". (வெளிப்படுத்தின் விசேஷம் 17:5,6).

## 8.ராஜாவுக்கு முன்பாக ஓடுதல்

- ***எலியா*** - "கர்த்தருடைய கை எலியாவின்மேல் இருந்ததினால், அவன் தன் அரையைக் கட்டிக்கொண்டு, யெஸ்ரயேலுக்கு வருமட்டாக ஆகாபுக்குமுன் ஓடினான்" (1 இராஜாக்கள் 18:46).
- ***யோவான்*** - "கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள், அவருக்குப் பாதை-களைச் செவ்வைபண்ணுங்கள் என்றும்.... வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தம் உண்டாகும் என்று ஏசாயா தீர்க்கதரிசியின்

ஆகமத்தில் எழுதியிருக்கிறபிரகாரம்” (லூக்கா 3:3,5).

வேதாகம காலங்களில், ஒரு அரசன் பயணப்பட்டு போனபோது வருகின்ற ராஜாவுக்கு வழியை ஆயத்தம்பண்ண வேலைக்காரர்கள் அவனுக்கு முன்பாக ஓடினார்கள். அவர்கள் பாறைகள், தடைகள் இருந்த சாலைகளை செவ்வைப்படுத்தினர், பள்ளங்களை நிரப்பினர், உயரமான இடங்களை வெட்டித்தள்ளினர் மற்றும் கோணலான திருப்பங்களை நேராக்கினர். அதே வழியில், கடைசி நாட்களில் எலியா செய்தியை பிரசங்கிப்பவர்கள் வரப்போகிற கிறிஸ்து ராஜாவுக்காக மக்களை ஆயத்தப்படுத்துவார்கள். மீட்பின் வழியை தெளிவாகவும், எளிமையாகவும் மற்றும் புரிந்து கொள்ள சுலபமாயும் இருக்கும் ஒரு செய்தியை அவர்கள் அறிவிப்பார்கள்.

“பின்பு, வேறொரு தூதன் வானத்தின் மத்தியிலே பறக்கக்கண்டேன்; அவன் பூமியில் வாசம்பண்ணுகிற சகல ஜாதிகளுக்கும், கோத்திரத்தாருக்கும், பாஷைக்காரருக்கும், ஜனக்கூட்டத்தாருக்கும் அறிவிக்கத்தக்கதாக நித்திய சுவிசேஷத்தை உடையவனாயிருந்து, (வெளிப்படுத்தின விசேஷம் 14:6).

# 9.தேவனை மகிமைப்படுத்துவதில் முதன்மையான அக்கறை.

- ***எலியா*** – “கர்த்தாவே, நீர் தேவனாகிய கர்த்தர் என்றும், தேவரீர் தங்கள் இருதயத்தை மறுபடியும் திருப்பினீர் என்றும் இந்த ஜனங்கள் அறியும்படிக்கு, என்னைக் கேட்டருளும், என்னைக் கேட்டருளும்” (1 இராஜாக்கள் 18:37).
- ***யோவான்*** – “அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும்” (யோவான் 3:30).

எலியா செய்தியை பிரசங்கிப்பவர்கள் தேவனை மகிமைப்படுத்துவதையே தங்கள் முதல் உரிமையாக பாவிப்பார்கள். யோவானும் எலியாவும் செய்தது போல அவர்கள் முற்றிலுமாக தேவனுடைய பணிக்காக தத்தம் செய்வார்கள். மற்றவர்கள் இரட்சிக்கப்படுவதற்காக அவர்கள் எந்த தியாகத்தையும் செய்யத் துணிவார்கள் – வேறு வார்த்தையில், தேவனுடைய ஊழியத்தில் எப்பொழுதும் ஈடுபட்டிருப்பார்கள்.

“அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை

வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை" (ரோமர் 12:1).

## 10.தேவனுடைய பலிபீடத்தை செப்பனிடுதல்

- ***எலியா*** - "அப்பொழுது எலியா சகல ஜனங்களையும் நோக்கி: என் கிட்டே வாருங்கள் என்றான்; சகல ஜனங்களும் அவன் கிட்டே வந்தபோது, தகர்க்கப்பட்ட கர்த்தருடைய பலிபீடத்தை அவன் செப்பனிட்டு" (1 இராஜாக்கள் 18:30).
- ***யோவான்*** – "அந்நாட்களில் யோவான்ஸ்நானன் யூதேயாவின் வனாந்தரத்தில் வந்து: மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கம் பண்ணினான்". (மத்தேயு 3:1,2).

எலியாவின் செய்தி "பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்கு'' (யூதா 3) திரும்புவதற்கு கொடுக்கப்படும் எக்காள அழைப்பு.
இன்று, நிறைய பேர் வேதாகமம் பழமை வாய்ந்ததாகிவிட்டது, அது இந்த காலத்துக்கு பொருந்துகிற வகையில் மறு திருத்தம் செய்ய

வேண்டியதாயிருக்கிறது என்று சொல்லும்போது, தேவன் சொன்னதை தீவிரமாக நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும், "நான் கர்த்தர், நான் மாறாதவர்" (மல்கியா 3:6).

"உன்னிடத்திலிருந்து தோன்றினவர்கள் பூர்வமுதல் பாழாய்க்கிடந்த ஸ்தலங்களைக் கட்டுவார்கள்; தலைமுறை தலைமுறையாக இருக்கும் அஸ்திபாரங்கள்மேல் நீ கட்டுவாய்; திறப்பானதை அடைக்கிறவன் என்றும், குடியிருக்கும்படி பாதைகளைத் திருத்துகிறவன் என்றும் நீ பெயர் பெறுவாய்" (ஏசாயா 58:12).

## 11.செய்திகள் சீர்திருத்தத்தைத் தூண்டுகின்றன.

- ***எலியா*** - "இப்போதும், கர்மேல் பர்வதத்திலே இஸ்ரவேலனைத்தையும் --------- என்னிடத்தில் கூட்டிக்கொண்டுவர ---------- அப்பொழுது எலியா சகல ஜனத்தண்டைக்கும் வந்து: நீங்கள் எந்தமட்டும் இரண்டு நினைவுகளால் குந்திக்குந்தி நடப்பீர்கள்; கர்த்தர் தெய்வமானால் அவரைப் பின்பற்றுங்கள்" (1 இராஜாக்கள் 18:19-21).
- ***யோவான்*** – "யோவான் வனாந்தரத்தில் ஞானஸ்நானங்கொடுத்து, பாவமன்னிப்புக்கென்று

மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானத்தைக்குறித்துப் பிரசங்கம் பண்ணிக்கொண்டிருந்தான். அப்பொழுது யூதேயா தேசத்தார் அனைவரும் எருசலேம் நகரத்தார் யாவரும், அவனிடத்திற்குப்போய், தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, யோர்தான் நதியில் ஞானஸ்நானம் பெற்றார்கள்" (மாற்கு 1:4,5)

எலியா மற்றும் யோவானின் நாட்களில் தேவனுடைய மக்கள் தங்களைச் சுற்றி இருந்த அஞ்ஞான மார்க்கத்தாரின் செல்வாக்குகளால் சீரழிந்து போய் தேவனுடைய சத்தியத்தோடு சமரசம் செய்து கொண்டனர் (1 இராஜாக்கள் 19:14; மத்தேயு 3:1,2). இந்த இரண்டு தைரியம் மிக்க தீர்க்கதரிசிகள் கொடுத்த செய்தி தேவனுடைய மக்கள் மத்தியில் எழுப்புதலையும் சீர்திருத்தத்தையும், ஆரம்பித்து வைத்தது.

இன்று, மறுபடியும் அநேகமான கிறிஸ்துவத்துவமும் வெதுவெதுப்பாகவும் உலகப்பிரகாரமாகவும் இருப்பதாகவே தெரிகிறது. நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டில் துவங்குகிறதாயிருந்தால் (எசேக்கியேல் 9:6, 1 பேதுரு 4:17). நிச்சயமாகவே சீர்திருத்தம் அங்கேயும் ஆரம்பித்தாக வேண்டும்! தேவனுடைய திட்டம் அவருடைய மக்களுக்காக

முழு உலகத்தையும் சென்றடைய வேண்டுமென்பதால், அவர் முதலாவதாக எலியா செய்தியை சபைக்கு சென்றடையச் செய்ய வேண்டும்.

பழைய ஏற்பாட்டில், எலியா மனந்திரும்புவதற்காக மக்களை வழிநடத்தி கர்மேல் பர்வதத்தில் அவர்களை தேவனிடம் திரும்ப வைத்தார். அதன் பிறகு அவர் ஜெபித்தார், பஞ்சத்தைப் போக்கத் தக்கதாக தேவன் நிறைவான மழையைப் பொழியச் செய்தார். அதுபோலவே, யோவான்ஸ்நானன் அவருடைய காலத்து மக்களுக்கு அழைப்புவிடுத்து மனந்திரும்பவும் இயேசுவை ஏற்றுக் கொள்ளவும் வைத்தார். கொஞ்ச காலத்துக்குப் பிறகு, அவர்கள் பரிசுத்த ஆவியை பெந்தெகோஸ்தே நாளிலே முன்மாரியாகப் பெற்றுக் கொண்டனர். நவீன காலத்து எலியாக்களும் மனந்திரும்புதலுக்கேற்ற செய்தியை பிரசங்கிப்பார்கள். பிறகு, சபை தன்னைத் தாழ்த்தும்போது, தேவனுடைய ஆவியாகிய பின்மாரி பொழியும்.

## 12.மக்களுக்கு கிறிஸ்துவைக் காட்டுங்கள்.

- ***எலியா*** - "தீர்க்கதரிசியாகிய எலியா

வந்து: ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் தேவனாகிய கர்த்தாவே, இஸ்ரவேலிலே நீர் தேவன்" (1 இராஜாக்கள் 18:36).

- ***யோவான்*** - "மறுநாளிலே யோவான் இயேசுவைத் தன்னிடத்தில் வரக்கண்டு: இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" (யோவான் 1:29)

மக்களை இயேசுவிடம் திருப்பி அவர்கள் தேவனை அறிந்து நித்திய ஜீவனைப் பெற வைப்பதுவே நவீன கால எலியாக்களின் விருப்பமாயிருக்கும்.

## தேவனுடைய சேனை

இயேசுவின் முதல் வருகைக்கு இஸ்ரவேல் ஆயத்தப்பட ஒரு விசேஷித்த தூதுவரை அனுப்புவது மிக முக்கியமானது என்று கர்த்தர் எண்ணியிருப்பார் என்றால் சபை எழுச்சி பெற இயேசுவின் இரண்டாம் வருகைக்காக ஒரு விசேஷித்த தூதையும் செய்தியாளர்களையும் அனுப்புவது எவ்வளவுக்கு அதிக முக்கியம் வாய்ந்ததாக இருக்கும் – மீட்பின் முக்கியமான உச்சகட்டம்?

கர்த்தர் எழுப்புதல் மற்றும் ஆயத்தம் செய்கிற ஒரு வேலையை செய்வதற்கு எலியாவுக்கும் யோவான்ஸ்நானனுக்கும் அதிகாரம் கொடுத்தது போலவே, தேவன் இந்நாளிலும் கடைசி காலத்தின் எலியாக்கள் அடங்கிய ஒரு சேனையை இந்த மாபெரும் எழுப்புதலின் வேலையை செய்ய ஆயத்தப்படுத்துகிறார்! "அமேசிங்க் ஃபாக்ட்ஸ்' இந்த மாபெரும் கடைசி கால எலியா செய்தியை எடுத்துச் செல்ல உங்களை பங்காளர்களாக இருக்க அழைக்கிறது. "உத்தமமான ஜனத்தைக் கர்த்தருக்கு ஆயத்தப்படுத்தும்படி" (லூக்கா 1:17).

"உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு; அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்" (சங்கீதம் 37:5).

போதகருக்கு முன்பாக ஒரு மணவாட்டியும் மணவாளனும் நிற்கும்போது, எப்பொழுதும் நிலைத்திருக்கக் கூடிய சில முக்கியமான வாக்குறுதிகளையும்------ உறுதி மொழிகளையும் எடுத்துக் கொள்ளுவர். இந்த உறுதிமொழிகளை நிறைவேற்ற முடியும் என்கின்ற நம்பிக்கையை எது கொடுக்கிறது? அவர்கள் மிகுந்த அன்பும் அர்ப்பணிப்பின் உணர்வையும் பெற்றிருக்கிறார்கள். அது போலவே, நாம் ஞானஸ்நான வாக்குறுதிகளை எடுக்கும்போது

நாம் அறிந்து கொள்ள வேண்டியது, “சுகவீனத்திலும், சுகத்திலும்; உயர்விலும், தாழ்விலும்; வெயிலானாலும், மழையானாலும்”. தேவனுடைய சபைகுடும்பமும் எந்த பூலோக குடும்பம் போல ஏற்றாத் தாழ்வுகளைப் பெற்றிருக்கும், ஆனால் நாம் இயேசுவை நேசித்து அவருடைய மக்களுக்கு ஒப்புக்கொடுத்தால், அது எந்த சோதனையிலும் தாங்கி நிற்கும் ஒரு விலைமதிப்பற்ற அனுபவமாக மாறுகிறது.

ஒரு முழுமையுமாக மாறிய ஒப்புக்கொடுத்த கிறிஸ்தவன் மூலமாக தேவன் எவ்வளவு செய்வார் என்பதை சிலவேளைகளில் நாம் குறைத்து மதிப்பிடுகிறோம் என நான் நினைக்கிறேன்! ஒரு சாதாரண மனிதனாகிய எலியாவின் ஜெபங்கள் மற்றும் விசுவாசம் மூலமாக இஸ்ரவேல் தேசம் தேவனுக்கென்று திருப்பப்பட்டது. வேதாகம வாக்குத்தத்தம்: “எலியா என்பவன் நம்மைப்போலப் பாடுள்ள மனுஷனாயிருந்தும், மழைபெய்யாதபடிக்குக் கருத்தாய் ஜெபம்பண்ணினான், அப்பொழுது மூன்றுவருஷமும் ஆறுமாதமும் பூமியின்மேல் மழை பெய்யவில்லை. மறுபடியும் ஜெபம்பண்ணினான், அப்பொழுது வானம் மழையைப் பொழிந்தது, பூமி தன் பலனைத் தந்தது” (யாக்கோபு 5:17,18).

தாவீது ராஜாவும் நமக்கு

ஞாபகப்படுத்துகிறார், “உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு; அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்” (சங்கீதம் 37:5).

பவுல் சேர்க்கிறார், “நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன், நான் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்ததை அவர் அந்நாள்வரைக்கும் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறார்” (2 தீமோத்தேயு 1:12).

மற்றும் உண்மையில், முழுமையான ஒப்புக்கொடுத்தலின் உதாரணம் இயேசுவே. “அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச்செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்” (1பேதுரு 2:23).

ஒப்புக்கொடுத்தல் பற்றி எனக்குப் பிடித்த அறிக்கைகளில் ஒன்றை இங்கே கூறுகிறேன். இது மாபெரும் நம்முடைய கிறிஸ்தவ எழுத்தாளர்களில் ஒருவரான எலன் ஜி. உவைட் என்பவரிடமிருந்து வருகிறது:

> “உலகத்தின் மாபெரும் தேவை நல்ல மனிதர்களே – வாங்கப்படவும் விற்கப்படவும் கூடாத மனிதர்கள்; தங்கள் உள்ளார்ந்த ஆத்துமாக்களில் உண்மையும் நேர்மையும் கொண்ட மனிதர்கள், பாவத்தை அதின்

சரியான பெயர் சொல்லி அழைக்க
பயப்படாத மனிதர்கள்; கம்பத்தின்
ஊசி முனைப் போல தங்களுடைய
மனச்சாட்சியில் கடமைக்கு
உண்மையாயிருக்கும் மனிதர்கள்; வானமே
இடிந்து விழுந்தாலும் சரியானவற்றிற்கு
நிலைத்து நிற்கும் மனிதர்கள்”
– கல்வி ப. 57.

அன்பான சகோதரனே, உண்மையில் வாஞ்சை இருக்குமென்றால் ஒரு நபர் அவன் அல்லது அவள் விரும்பும் எல்லாவற்றையும் தேவனுடைய உதவியோடு செய்ய முடியும் என்று நான் கற்றுக்கொண்டிருக்கிறேன். விசுவாசமும் நம்பிக்கையும் இருக்கும் போது நம்புகிறவனுக்கு எல்லாம் சாத்தியமே என்று நான் கற்றுக்கொண்டிருக்கிறேன். நீங்கள் உண்மையில் வாஞ்சித்து நம்புவீர்களாகில் சபையில் ஒரு துடிப்பான ஆவியால் நிரப்பப்பட்டு கிறிஸ்தவனாக நீங்கள் வாழ்ந்து வெற்றி பெற முடியும்.

ஆனாலும், இயேசு இல்லாமல் வரப்போகும் புயல் நிறைந்த காலங்களில் நாம் நிச்சயமாகவே அமிழ்ந்து போவோம்.

நண்பனே, வரப்போகும் புயலை தாக்கு பிடிக்க இது மட்டுமே ஒரே வழி: இயேசுவை உங்கள் படகில் வைத்துக் கொள்ளுங்கள்.

அவர் படகின் கயிறுகளையும் சுக்கானையும் எடுத்துக்கொள்ளட்டும் அப்பொழுது அவர் வாழ்க்கையின் புயல்களினூடே உங்களை வழிநடத்தி பரலோகத்தின் துறைமுகத்துக்கு பத்திரமாக உங்களைக் கொண்டு வருவார்.

அதனால், இன்று நீங்கள் ஒரு உறுதியான தீர்மானத்தை எடுக்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்ளுகிறேன். அவரை மாலுமியாகவும், கர்த்தராகவும் மற்றும் இரட்சகராகவும் ஏற்றுக் கொண்டு உங்களை அவருடைய பரிசுத்த ஆவியால் நிரப்பவும், தொடர்ந்து அவர் எங்கெல்லாம் வழி நடத்துகிறாரோ அங்கெல்லாம் விசுவாசத்துடன் செல்லவும் கேட்டுக் கொள்ளுங்கள்.

அவருடைய ஆச்சரியமான கிருபையை பகிர்ந்து கொள்ள தேவன் எப்படி எலியாவைப் பயன்படுத்தினார் என்பதை நீங்கள் படித்தறிந்தீர்கள் – அதனைத் தொடர்ந்து கிடைத்த ஆச்சரியமான முடிவுகளையும் படித்தீர்கள். இலட்சக்கணக்கான கடைசி கால எலியாக்கள் உலகமனைத்தையும் இயேசுவுக்கென்று மக்களை அழைக்கும் பணியில் என்ன செய்வார்கள் என்று சற்றே கற்பனைப் பண்ணிப்பாருங்கள். நீங்கள் இவர்களில் ஒருவராக இருக்க வேண்டுமென நான் எதிர்பார்த்து ஜெபிக்கிறேன்.

உங்கள் கரத்தை கலப்பை மீது வைத்து,

உறுதியாக பிடித்துக்கொண்டு, திரும்பிப் பாராதபடிக்கு கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுத்தலின் வாக்குறுதியை நீங்கள் ஏன் என்னோடு சேர்ந்து எடுத்துக் கொள்ளக்கூடாது?

"அதற்கு ரூத்: நான் உம்மைப் பின்பற்றாமல் உம்மைவிட்டுத் திரும்பிப் போவதைக் குறித்து, என்னோடே பேச வேண்டாம்; நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன்; நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன்; உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்; உம்முடைய தேவன் என்னுடைய தேவன். நீர் மரணமடையும் இடத்தில் நானும் மரணமடைந்து, அங்கே அடக்கம் பண்ணப்படுவேன்; மரணமேயல்லாமல் வேறொன்றும் உம்மை விட்டு என்னை பிரித்தால், கர்த்தர் அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் எனக்குச் செய்யக்கடவர் என்றாள்" (ரூத் 1:16-17).

AMAZING FACTS

India

# அமேசிங் ஃபேக்ட்ஸ் வேதாகமப் பாடங்கள் மூலம் உங்கள் தேடுதலைத் தொடருங்கள்!

மனதைக் கவரும், ஊக்கமூட்டும் இந்தத் தொடர் சத்தியங்கள் உங்கள் எதிர்காலத்தை தைரியத்துடனும் நம்பிக்கையுடனும் எதிர்கொள்ள உதவும்.

எங்களை தொடர்பு கொள்ள

**BibleStudy.AFTV.in**

என்ற இணையதளத்தில் இன்றே எங்களை சந்திக்கவும்.

இன்னும் அதிகமான **இலவச**

# டிஜிட்டல் பத்திரிக்கைகளைத் தேடிக் கண்டுபிடியுங்கள்.




**AFTV.in/Free-Book-Library**

ஆங்கிலம், ஹிந்தி, தெலுகு என பல மொழிகளில் கிடைக்கிறது!

AMAZING FACTS
India
Post Box No. 51 • Banjara Hills,
Hyderabad, TS, 500034

**www.AmazingFactsIndia.org**